# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2443/53 - 2025 ජූලි මස 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.07.03

*2443/53 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

தொடர்பு இல. MUDH/WS/ LA/04/555.

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டம் 92 ஆம் பிரிவின் கீழான கட்டளை***

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர், அநுர கருணாதிலக ஆகிய நான், குறித்த சபைக்கு, யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்புச் செயற்திட்டத்தின் கீழ் தலையடி, கடல் நீரில் உப்புக்களை வெளியேற்றும் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீரை எடுத்துக் கொண்டு செல்லல் மற்றும் இதன் மூலம் வெளியேறும் தூய்மையற்ற நீரை வெளியேற்றுவதற்கு குழாய்களை பொறுத்துவதற்காக காணித்துண்டு ஒன்று தேவைப்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் உப அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையை சுவீகரித்துக் கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**அநுர கருணாதிலக்க,**
நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும்
வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு,
12 ஆவது மாடி,
செத்சிறிபாய கட்டிடம் 11,
பத்தரமுல்லை,
2025, யூன் 30.


1A - G 44734 — 08 (2025/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**உப அட்டவணை**

*வட மாகாணத்தின், யாழ்ப்பாண மாவட்டத்தில், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் J/428, மருதன்கேனி கிராம அலுவலர் பிரிவில், தலையடி கிராமத்திலமைந்த, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. பீ. புஸ்பராஜா அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 7560 இற்கு உரிய நில அளவை வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 01 இற்கு உரிய "கடற்கரை மணல்" எனும் காணியில் கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 1றூட் 31.20 பேர்ச் அளவிலான காணித்துண்டு.*

**காணியின் எல்லைகள்:**

வடக்கு: கடலோரம்;
கிழக்கு: சுவக்கன்பிள்ளை கிரிசாந்த் உரிமை கோரும் காணி;
தெற்கு: பிரதேச சபை வீதி;
மேற்கு: தர்மலிங்கம் எலன் ரொக்சி உரிமை கோரும் காணி.

**காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும்:**

1. திரு. பர்னாட் ஜெகநாதன்,
ரென்டஸ்கேட் 13,
9900 FR.ஹான்,
டென்மார்க்.

EOG 07 - 0034